இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 12-04-2025

# நீட் - போராட்டம் தொடர்கிறது

நீட் தேர்வுக்கு எதிரான தமிழ்நாடு அரசின் போராட்டம் தொடர்கிறது. ‘இறுதியில் வெல்வோம்’ என்ற நம்பிக்கையை ஆளுநர் விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பானது உறுதி செய்துள்ளது. தொய்வின்றி சட்டப் போராட்டம் நடத்தினால் அதில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

**நீட் விவகாரத்தில் தி.மு.க. நாடகம் ஆடுவதாக தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி சொல்லி வருகிறார். நாடகம் ஆடுவது அவர்தானே தவிர, தி.மு.க. அரசு அல்ல. ‘நீட் தேர்வு நல்ல தேர்வுதான், அதனை அகற்ற முடியாது’ என்று முதலமைச்சராக இருந்த போது சொன்னதும் பழனிசாமிதான். இன்றைக்கு நீட் தேர்வை ஆதரிக்கிறேனா - எதிர்க்கிறேனா என்று சொல்லாமல் ‘டிமிக்கி’ கொடுத்துக் கொண்டு இருப்பவரும் பழனிசாமிதான்.**

ஆனால் இப்படி ஒரு தேர்வு வரப்போகிறது என்று தெரிந்த காலம் முதல் எதிர்த்துக் கொண்டிருக்கும் இயக்கம் தி.மு.கழகம். அந்தப் போராட்டத்தை தொய்வின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இயக்கமும் தி.மு.கழகமே.

தமிழ்நாடு அரசால் - சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட நீட் விலக்கு மசோதாவை நிராகரிப்பதாக ஒன்றிய அரசில் இருந்து தகவல் வந்த உடனே அதனை சட்டமன்றத்தில் சொன்னவர் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இப்படி திருப்பி அனுப்பி வைக்கப்பட்டதை ஒன்றரை ஆண்டுகளாக மறைத்துவிட்டார்கள். ஒன்றிய அரசின் வழக்கறிஞரே, உயர்நீதிமன்றத்தில் சொன்ன பிறகுதான் அது வெளிச்சத்துக்கு வந்தது. அதன் பிறகும் அன்றைய அ.தி.மு.க. அரசு ஏதும் செய்யவில்லை.

ஆனால் இப்போது, இப்படி ஒரு தகவல் வந்ததும் உடனடியாக சட்டமன்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கடந்த 9.4.2025 அன்று கூட்டினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இதில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் முன்மொழிந்தார்கள்.

> “மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்க்கை முறையில் தமிழ்நாட்டிற்கு ‘நீட்’ தேர்வுமுறையிலிருந்து விலக்கு அளிப்பதற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய சட்டமுன்வடிவிற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் தர மறுத்துள்ள நிலையில், இந்த விலக்கைப் பெறுவதற்காகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து சட்டப் போராட்டத்தை நடத்தவேண்டும் என்று இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.
>
> இந்த வகையில், ‘நீட்’ தேர்வு முறையை எதிர்த்து, கடந்த ஜூலை 2023ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கினைத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்வது, நமது சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் தர மறுத்துள்ளதை எதிர்த்து, தேவைப்படின், புதிய வழக்கு ஒன்றினை மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் தொடுப்பது உள்ளிட்ட அனைத்து சட்டபூர்வ நடவடிக்கைகளையும், சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசனை செய்து மேற்கொள்வது என ஒருமனதாகத் தீர்மானிக்கப்படுகிறது.”

என்பதுதான் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள் முன்மொழிந்த தீர்மானம் ஆகும். இதனை சட்டமன்றக் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து ஏற்றுக் கொண்டுள்ளன. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறி இருக்கிறது.

“நீட் தேர்வு மசோதாவை நிராகரித்து இருக்கலாம். ஆனால் ‘நீட்’ தேர்வு முறையை அகற்றுவதற்கான நம்முடைய போராட்டம் எந்த வகையிலும் முடிந்து விடவில்லை.

**நீட் தேர்வு என்பது ஏதோ விலக்க முடியாத தேர்வு அல்ல. பயிற்சி மையங்களின் நலனுக்காக யாரோ சிலர் தங்களின் சுயநலனுக்காக ஒன்றிய அரசை தவறாக வழி நடத்தி நடத்தும் தேர்வு அது. அதையும் முறையாக நடத்தவில்லை என்பது, பல்வேறு மாநிலங்களில் சி.பி.ஐ. மூலமாக வழக்குகள் நடந்து வருவதிலிருந்தே உங்களுக்குத் தெரியும் நாட்டுக்கும் நன்றாகத் தெரியும்.” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.**

நீட் தேர்வில் எத்தகைய முறைகேடுகள் நடந்து வருகிறது என்பதை நாடு அறியும். ‘தேசிய தேர்வு முகமை’ எனப்படும் என்.டி.ஏ. என்ற அமைப்பு தான் இந்தத் தேர்வை நடத்துகிறது.

“நீட் தேர்வு வினாத்தாள்கள் ஹசாரிபாக், பாட்னாவில் கசிந்திருக்கிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நீட் வினாத்தாள் கசிவால் 155 மாணவர்கள் பலனடைந்திருக்கிறார்கள் என்பது சி.பி.ஐ. விசாரணை மூலம் தெரிய வருகிறது” என உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடந்த ஆண்டே தீர்ப்பு அளித்தார்கள். நீட் தேர்வு மோசடியானது என்பதற்கு வேறு சாட்சியம் தேவையில்லை.

720 மதிப்பெண்ணுக்கு 720 மதிப்பெண்ணை 61 பேர் பெற்றதாக முதலில் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக வழக்கு வந்து, உச்சநீதிமன்ற நீதிபதிகள் இதற்கான விசாரணை நடத்த உத்தரவிட்டார்கள். இதன் பிறகு தேர்வு முடிவு திருத்தப்பட்டது. இறுதி முடிவுகளின்படி இந்த எண்ணிக்கை 17ஆக குறைந்துவிட்டது. உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போடாமல் போயிருந்தால் 61 பேர் 720 மதிப்பெண் வாங்கியதாக ஆகி இருக்கும்.

2024 மே மாதம் 5 ஆம் தேதி நடைபெற்ற நீட் தேர்வில் 23.33 லட்சம் மாணவ, மாணவியர் இந்தியா முழுவதும் எழுதினார்கள். தேர்வு நடந்த நாளின் போதே உத்தரப்பிரதேசம், அரியானா, பீகார், ஜார்கண்ட் ஆகிய பல மாநிலங்களில் வினாத்தாள் கசிந்தது. ஆனால் அதைப் பற்றி தேர்வு முகமை கவலைப்படவில்லை. உடனடியாக இந்த தேர்வு ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்த மோசடியை ‘கருணை மதிப்பெண்’ என்ற பெயரால் அரங்கேற்றியது தேசிய தேர்வு முகமை. 1500 பேருக்கு கருணை மதிப்பெண் வழங்கி இருக்கிறார்கள். இவர்களுக்கு மறுதேர்வு நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மறுதேர்வுக்கு பலபேர் வரவில்லை. எழுதியவர்கள் முடிவிலும் முன்பு போல் இல்லை. இயற்பியல் வினாத்தாளில் குழப்பம் என்று சொல்லி 44 பேருக்கு கூடுதல் மதிப்பெண் போட்டிருந்தார்கள். அதுவும் உச்சநீதிமன்ற விசாரணையில் ரத்து செய்யப்பட்டது. இதுதான் இவர்கள் நடத்தும் நீட் தேர்வு ஆகும்.

**இந்த மோசடியான தேர்வு நிச்சயம் ரத்து செய்யப்படும். அதற்கான போராட்டம் தொடர்கிறது. பழனிசாமி வழக்கம் போல வேடிக்கை பார்க்கட்டும்.**



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நேற்று (11.4.2025) அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட திருச்சி சிவா எம்.பி., நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், Social Democratic Party of India (SDPI) கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக், மாநில துணைத் தலைவர்கள் அச. உமர் பாரூக், அப்துல் ஹமீத், மாநில பொதுச் செயலாளர்கள் ஏ.கே. அப்துல் கரீம், அபூபக்கர் சித்திக், வர்த்தக அணி மாநில தலைவர் அமீர் ஹம்சா மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, ஒன்றிய அரசின் வக்ஃபு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ. ராசா, தயாநிதி மாறன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.4.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன் சந்தித்து, பள்ளிகளில் மாணவர்களின் ஆதார் பதிவை துல்லியமாக மேற்கொண்டதில் முதலிடம் பெற்றதற்காக ஒன்றிய அரசின் இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தால் (UIDAI) வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட இயக்குநர் டாக்டர் மா. ஆர்த்தி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (11.4.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சந்தித்து, இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள அரசுப் பள்ளிகளில் இதுவரை புதிதாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை, கட்டப்பட்டுவரும் கட்டடங்களின் எண்ணிக்கை, கட்டப்படவுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை குறித்த விவரங்களை அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தொடர்ந்து அனுப்பி வரும் நிலையில், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த அறிக்கையினை அளித்தார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது முகாம் அலுவலகத்தில் கழக இலக்கிய அணிப் பொருளாளர் அரிமா நா.சந்திரபாபு தனது பிறந்தநாளை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பலவீனப்படுத்துவதா?

## ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் - ஒன்றிய அரசுக்குக் கடிதம்!

*புதுடெல்லி, ஏப். 12 -*

*தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மிக மோசமாக பலவீனப் படுத்தும் திட்டத்தை கைவிட வேண்டும் என்று தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.*

*தகவல் அறியும் உரிமைச் சட்டம் என்பது ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகளை நோக்கி பொதுமக்கள் அதிகாரப்பூர்வமாக கேள்வி கேட்கும் சட்டப்பூர்வ உரிமையை வழங்குகிறது. தற்போது, பா.ஜ.க. அரசு, கொண்டுவந்துள்ள டிஜிட்டல் தனி நபர் தரவுகள் பாதுகாப்பு சட்டம், தகவல் அறியும் உரிமை சட்டத்தை பலவீனப்படுத்துவதாக உள்ளது.*

*இந்நிலையில் டிஜிட்டல் தனி நபர் தரவுகள் பாதுகாப்பு சட்டத்தை நீக்க வலியுறுத்தி தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, தி.மு.க. எம்.பி. டி.ஆர்.பாலு, உள்ளிட்ட 120க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் கையெழுத்திட்ட கடிதம், தகவல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.*

*ஆர்.டி.ஐ. சட்டத்தை பலவீனப் படுத்தும் திட்டத்தை கைவிடுங்கள்: இந்தியா கூட்டணி ஆட்சியாளர்கள், அதிகாரிகளை நோக்கி மக்கள் அதிகாரப்பூர்வமாக கேள்வி கேட்கும் உரிமையை வழங்கும் ஆர்டிஐ சட்டம் பா.ஜ.க. அரசு கொண்டு வந்த டிஜிட்டல் தனிநபர்தரவுகள் பாதுகாப்பு சட்டம், ஆர்.டி.ஐ சட்டத்தை பலவீனப்படுத்துகிறது டிஜிட்டல் தனிநபர் தரவுகள் பாதுகாப்பு சட்டத்தை நீக்க வலியுறுத்தல் தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தல் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, திமுக எம்.பி. டி.ஆர்.பாலு 120க்கும் மேற்பட்ட எம்.பி.,க்கள் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றிய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் வழங்கப்பட்டது.*



இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஊராட்சி ஒன்றியம், கரடிகுப்பம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.60.6 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலைய கட்டடப் பணிக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அடிக்கல் நாட்டினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெ.யு.சந்திரகலா, பா.ஜெயசுதா, வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி, முருகன், ரத்தினம் மற்றும் மு.சிவானந்தம், பூர்ணசந்திரன் சந்திரன், தெய்வசிகாமணி, ஒச்சேரி பாலாஜி, பெ.வடிவேலு, ஆர்.பி. ரவீந்திரன் பெருமாள், முரளி, ராமன் பிள்ளையார் குப்பம் சண்முகம், இ.செல்வம் கழகத்தினர் உடனிருந்தனர்.